## இனிமையான குழந்தைகளே! இந்த நேரத்தில் சுயம் பகவான் உங்கள் எதிரில் ஆஜராகியிருக்கின்றார், அவர் பூந்தோட்டத்தை (சொர்க்கத்தை) பரிசாகக் கொண்டு வந்திருக்கின்றார், ஆகையால் அளவற்ற குஷியுடன் இருங்கள்.

கேள்வி: தந்தை தனது குழந்தைகளுக்கு எந்த மாதிரி ஆசீர்வாதம் செய்கின்றார்?

பதில்: குழந்தைகளை தனக்குச் சமமாக ஞானம் நிறைந்தவர்களாக ஆக்குவது தான் அவரது ஆசிர்வாதமாகும். இந்த ஞானத்தின் ஆதாரத்தில் நரனிலிருந்து ஸ்ரீநாராயணனாக ஆகிவிடு கிறீர்கள். பாபா கூறுகின்றார் லி குழந்தை களே! நான் உங்களுக்கு இராஜயோக கல்வியைக் கற்றுக் கொடுத்து இராஜாவிற்கெல்லாம் இராஜாவாக ஆக்கு கிறேன். என்னைத் தவிர இப்படிப் பட்ட ஆசிர்வாதம் யாரும் செய்ய முடியாது.

பாடல்: என்னைக் கட்டித் தழுவிக் கொள்ளுங்கள் ......

ஓம்சாந்தி. இது இந்த நேரத்தில் பந்தனமுள்ளவர்களின் அழைப்பாகும். ஏனெனில் முழு உலகமும் துயரத்தில் இருக்கிறது. அதிலும் கோபியர்கள் (சகோதரிகள்) மிகவும் துயரத்தில் இருக்கின்றனர். எங்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்று அவர்கள் பாடுகின்றனர். பக்தியில் அழைத்துக் கொண்டே இருக்கின்றனர். ஆனால் பகவான் யார்? என்பது அவர்களுக்குத் தெரியாது. இங்கிருக்கும் சகோதரிகளுக்குத் தெரியும், ஆனால் பந்தனத்துடன் இருக்கின்றனர், துக்கமாக இருக்கின்றனர். தந்தை நம்மை கழுத்து மாலையாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றனர். சிவனின் ருத்ர மாலை மிகவும் பிரபலமாகும். ஆக இந்த நேரத்து பிராமண பிராமணிகள் நாம் சிவபாபாவின் கழுத்து மாலையிலேயே இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். ஏனெனில் இந்த நேரத்தில் மனைவி அசுர கணவனின் மாலையாக இருக் கின்றனர். நாம் இப்போது ஈஸ்வரனின் கழுத்து மாலையாக ஆக வேண்டும் என்று சகோதரிகள் விரும்புகின்றனர். தந்தை ஆஜராகி இருப்பதால் தான் கூறுகின்றனர். ஈஸ்வரன் எதிரில் இருப்பதாக நினைத்து உண்மையை கூறுகிறேன் என்ற உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றனர். அரசாங்கத்தின் பெரிய பெரிய அமைச்சர்களும் உறுதி எடுத்துக் கொள்கின்றனர். கீதையை கையில் எடுத்துக் கொள்கின்றனர். ஏனெனில் பாரதத்தின் தர்ம சாஸ்திரமாகும். ஆக ஒன்று ஈஸ்வரன் எதிரில் இருப்பதாக நினைத்து உறுதி எடுத்துக் கொள்கின்றனர். அனைவரும் ஈஸ்வரனாக இருக்கின்றனர், அனைவரின் முன்னிலையில் உறுதி எடுத்துக் கொள்கிறேன் என்பது கிடையாது. ஆக தந்தை அவசியம் எப்போதாவது ஆஜராகி இருந்திருப்பார். இந்த நேரத்தில் கிடையாது. உங்களுக்காக மட்டுமே எதிரில் இருக்கின்றார், குழந்தைகளாகிய உங்களுக்கு படிப்பு கற்பித்துக் கொண்டிருக்கின்றார். சிவராத்திரியும் கொண்டாடுகின்றனர், அவசியம் வந்திருக்க வேண்டும். எப்படி வந்தார்? வந்து என்ன செய்தார்? என்பது யாருக்கும் தெரியாது. இவ்வளவு பெரிய சோமநாத கோயில் இருக்கிறது. ஆனால் அவர் வந்து என்ன செய்தார்? என்பது தெரியாது. ஏனெனில் சிவனுக்குப் பதிலாக கிருஷ்ணரின் பெயர் வைத்து விட்டனர். சங்கமயுகத்தை நீக்கி துவாபர யுகத்தில் காண்பித்து விட்டனர். அவர் நிராகார மானவர், அவருக்கு மனிதர்களைப் போன்று ஸ்தூல உடல் கிடையாது

என்பதை குழந்தை களாகிய நீங்கள் அறிவீர்கள். இப்போது அவர் நம் எதிரில் அமர்ந்திருக்கின்றார். நீங்கள் அவரை எதிரில் பார்க்கிறீர்கள். அவர் ஞானம் நிறைந்தவராக, பேரானந்தம் நிறைந்தவராக இருக்கின்றார். ஞானம் கொடுக்கின்றார், இதுவே அவரது ஆசிர்வாதமாகும். இந்த ஞானம் என்ற ஆசிர்வாதத் தின் மூலம் நீங்கள் நரனிலிருந்து நாராயணனாக ஆகிறீர்கள். அவர் பிரம்மா உடலின் மூலம் சுயம் கற்பித்துக் கொண்டிருக்கின்றார். சுயம் தந்தை கூறுகின்றார் லி செல்லமான குழந்தை களே! நான் உங்களுக்கு இராஜயோகம் கற்பித்து இராஜாவிற்கெல்லாம் இராஜாவாக ஆக்குகிறேன். கிருஷ்ணர் கற்பிக்க முடியாது. அவர் சுயம் இராஜாவிற்கெல்லாம் இராஜாவாக ஆகியிருக்கின்றார். அவ்வாறு ஒரே ஒரு கிருஷ்ணரோ அல்லது லெட்சுமி-நாராயணனாகவோ இருக்க முடியாது. இது முழு சூரியவம்ச இராஜ்யமாகும். அவரது இராஜ்யத்தை இப்போது மாயை அபகரித்து விட்டது. இப்போது நான் மீண்டும் எதிரில் வந்திருக்கிறேன். இப்போது பிராமணர் களாகிய உங்கள் எதிரில் இருக்கிறேன்.

தந்தை இவ்வளவு தூர தேசத்திலிருந்து வந்திருக்கின்றார் எனில் ஏதாவது பரிசு கொண்டு வந்திருப்பார். லௌகீக தந்தை வருகின்ற போது எத்தனையோ பரிசுகளைக் கொண்டு வருவார்! இவர் அனைவருக்கும் தந்தை ஆவார், அவரைத் தான் அனைவரும் நினைவு செய்கின்றனர். தூர தேசத்திலிருந்து வருகின்றார் எனில் வெறும் கையுடன் வருவாரா? எந்த மனிதனாலும் கொடுக்க முடியாத பரிசை நான் உங்களுக்காக கொண்டு வந்திருக்கிறேன் என்ற தந்தை கூறுகின்றார். நான் சொர்க்கம் என்ற பூந்தோட்டத்தை கொண்டு வந்திருக்கிறேன். எவ்வளவு பெரிய பரிசாகும்! அங்கு எவ்வளவு சுகம் இருக்கும் என்பதை பாபா சாட்சாத்காரமும் செய்விக் கின்றார். ஒவ்வொரு அங்கத்திலும் நறுமணம் இருக்கும். லெட்சுமிலிநாராயணனின் ஒவ்வொரு அங்கத்திலும் நறுமணம் இருக்கும். இந்த சரீரம் புழுக்களினால் ஆனது. பாபா புழுக்களை நீக்கி விட்டு குளவியாக ஆக்குகின்றார். இங்கிருக்கும் சரீரம் புழுக்கள் நிறைந்த நோயாளி சரீரமாகும். அங்கிருக்கும் சரீரம் எவ்வளவு அழகானதாக இருக்கிறது! கோயில்களிலும் எவ்வளவு அழகான மூர்த்திகளை உருவாக்குகின்றனர்! இந்த நேரத்து சரீரம் மற்றும் அந்த சரீரத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது! 5 ஆயிரம் ஆண்டிற்கான விசயமாகும், இந்த பாரதம் இந்திரபிரஸ்தமாக இருந்தது. அங்கு ஆத்மாவும் தூய்மையாக இருந்தது, சரீரமும் தூய்மையாக இருந்தது. பாபா உங்களை கல் பாத்திரத்திலிருந்து தங்கப் பாத்திரமாக ஆக்குகின்றார். தந்தை உங்களுக்கு முழுமையாக சேவை செய்து எப்படியிருந்தவர்களை எப்படி ஆக்குகின்றார்! தந்தைக்கும் கூட பாகம் இருக்கிறது! பிறகு ஆசிரியர் மற்றும் சத்குருவிற்கான பாகமும் நடிக்கின்றார். அவருக்கு யாதொரு தந்தை, ஆசிரியர், குரு என்பது கிடையாது. உங்களது லௌகீகத் தந்தைக்கு தந்தை, ஆசிரியர், குரு அவசியம் இருப்பர். எனக்கு யாரும் கிடையாது என்று சிவபாபா கூறுகின்றார். ஆனால் அவரது தொழிலை யாரும் அறியவில்லை. எதுவரை சொர்க்கம் பற்றி யாருக்கும் தெரியவில்லையோ அதுவரை நாம் நரகத்தில் இருக் கிறோம் என்பதை தெரிந்து கொள்ள முடியாது. அசுத்த ஆடைகளை...... என்று கிரந்தத்திலும் படிக்கின்றனர், ஆனால் தன்னை அவ்வாறு புரிந்து கொள்வது கிடையாது. ஞானம் கொடுத்து கருப்பானவர்களை வெள்ளையாக்குவதற்காக தந்தை வந்திருக்கின்றார். இந்த நேரத்தில் நீங்கள் ஞான சூரியன், ஞான சந்திரனனாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். சந்நியாசிகளால் தூய இல்லற மார்க்கத்தை உருவாக்க முடியாது. நான் உங்களை இராஜாவிற்கெல்லாம்

இராஜாவாக ஆக்குகிறேன் என்று அவர்களால் கூற முடியாது. அவர்கள் துறவற மார்க்கத்தைச் சார்ந்த வர்கள். பயத்தில் வீட்டை விட்டு சென்று விடுகின்றனர், இங்கு எந்த பயமும் கிடையாது. தந்தையிடம் குழந்தைகள் வந்திருக்கிறீர்கள், பாபா, நம்மிடத்தில் சக்தி இருக்கிறது என்று கூறுகிறீர்கள். ஒன்றாக இருந்து கொண்டு தூய்மையாக இருக்க முடியும். ஒருவேளை ஒரு கன்னியாவிற்கு பிரச்சனை வருகிறது எனில் கன்னியா பந்தனத்திலிருந்து விடுவித்துக் கொள்ள கந்தர்வ விவாஹம் செய்து கொள்ள முடியும், நான் எரிந்து இறந்து விடமாட்டேன். ஞான ஆயுதத்தை (அம்பு) நடுவில் வைத்துக் கொள்வேன். இருவரும் பிராமண, பிராமணி ஆன பின்பு, சகோதரன்லிசகோதரி ஆன பின்பு விஷம் எப்படி பருக முடியும்? சாஸ்திரங்களிலும் கந்தர்வ விவாஹம் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இதன் பொருள் புரிந்து கொள்வது கிடையாது. பெண் நரகத்தின் வாசல் என்று சந்நியாசிகள் கூறிவிடு கின்றனர். ஒன்றாக இருந்து கொண்டே தூய்மையாக இருக்கும் ஞான அம்பு அவர்களிடம் கிடையாது. நீங்கள் அவர்களை விட தைரியசாலிகளாக இருக்கிறீர்கள், காமச்சிதையிலிருந்து இறங்கி ஞானச் சிதையில் அமர்கிறீர்கள். ஆகவே கருப்பிலிருந்து வெள்ளையாக ஆகிவிடுகிறீர்கள். இன்றைய நாட்களில் சந்நியாசிகள் திருமணமும் செய்து வைக்கின்றனர். தேவாலயங்களிலும் திருமணம் நடைபெறு கிறது. இல்லையெனில் கிறிஸ்துவை ஏன் சிலுவையில் ஏற்றினர்? இந்த தூய்மையின் காரணத்தினால் தான். தூய்மையாக இருங்கள் என்று கூறுவது யார்? என்று கேட்கின்றனர். துன்பங்கள், நிந்தனை வருகின்றன. இங்கு சிவபாபாவிற்கு வருவது கிடையாது, ஆனால் யாரிடத்தில் பிரவேசம் ஆகிறாரோ, நீண்ட பூட்சாக (செருப்பாக) இருக்கின்றாரோ அவருக்கு வருகிறது. செல்லும் வழியில் பிராமணர் மாட்டிக் கொள்கிறார். பழைய செருப்பல்லவா! நான் கிருஷ்ணன் என்று இவர் ஒருபோதும் கூறுவது கிடையாது. இராஜயோகம் கற்றுக் கொண்டால் நரனிலிருந்து நாராயணனாக ஆவேன், ஆனால் இப்போது கிடையாது என்று கூறுகின்றார். அதே போன்று குழந்தைகளுக்கும் நம்பிக்கை இருக்கிறது லி நான் நரனிலிருந்து (ஆண்) நாராயணன், நாரியிலிருந்து (பெண்) லெட்சுமியாக ஆவேன். தோல்வியடைந்து விட்டால் சத்ரியனாக ஆகிவிடுவீர்கள். இராமருக்கு 33 மதிப்பெண்களை விட குறைவாக கிடைத்ததால் சந்திர வம்சத்திற்கு சென்று விட்டார். சூரியவம்சத்தினரும் சந்திரவம்சத்திற்கு வருகின்றனர். அந்த நேரத்தில் (சத்யுக கடைசியில்) லெட்சுமிலிநாராயணன், சீதாலிராமருக்கு இராஜ்யத்தை கொடுத்து விடுவர், லெட்சுமிலிநாராயணனும் மறுபிறவி எடுத்து எடுத்து திரேதாவிற்கு வருகின்றனர். இராஜ்ய குலத்தில் பிறப்பு எடுத்துக் கொண்டே இருப்பர். பிறகு சீதாலிஇராமர் என்ற பெயர் நடைபெற்று வருகிறது. லெட்சுமிலிநாராயணன் என்ற பெயர் அழிந்து விடுகிறது.

சுயதரிசன சக்கரம் என்பது என்ன? என்று கேள்வி கேட்கிறேன். (ஒருவருக்கொருவர் கேட்டுக் கொள்கின்றனர்) ஆம், இது சக்கரமாகும். தேவதாவிலிருந்து எப்படி சத்ரியர், வைஷ்யர், சூத்ரர் ...... இப்போது பிராமணர் வர்ணத்தில் வருகிறோம். இந்தச் சக்கரத்தை எந்த அளவு சுற்றுவீர்களோ அந்த அளவிற்கு விகர்மங்கள் விநாசம் ஆகும், இதன் மூலம் இராவணனின் கழுத்து துண்டிக்கப்பட்டு விடும். குழந்தைகளாகிய உங்களுக்கு எல்லையற்ற தந்தையின் மீது அளவற்ற அன்பு இருக்கிறது. பாபா உங்களது பிரிவை எங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது என்று நீங்களும் கூறுகிறீர்கள்.

பந்தனத்தில் இருந்து கொண்டு ஏங்கும் குழந்தைகளும் இருக்கவே செய்கின்றனர். ஏனெனில் இவர் தாய், தந்தை ...... ஒன்று தாய் ஜெகதம்பாவாக இருக்கின்றார், அவரை அனைவரும் நினைவு செய்கின்றனர். ஆனால் ஜெகதம்பாவிற்கு தாய் யார்? பிரம்மா, சரஸ்வதிக்கும் தந்தை இருக்கிறார் என்பது யாருக்கும் தெரியாது. இந்த சரஸ்வதியே பிறகு லெட்சுமியாக மாறுகின்றார் என்பது பூஜாரிகளுக்கும் தெரியாது. பிறகு 84 பிறவிகள் எடுத்த பின்பு இதே சரஸ்வதியாக ஆகின்றார். இந்த ஞானம் இந்த பாபாவிடம் கிடையாது. இவரிடத்தில் ஞானம் இருந்திருந்தால் அவசியம் ஏதாவது குருவிடமிருந்து அடைந்திருக்க வேண்டும். பிறகு அந்த குருவின் மகிமையும் பாட வேண்டியிருக்கும். பிறகு அந்த குருவிற்கு சீடர்களும் இருப்பர். ஆனால் பாபாவிற்கு சாகார குரு யாரும் கிடையாது. நான் உங்களது தந்தை, ஆசிரியர், குருவாக இருக்கிறேன், நான் இந்த பழைய செருப்பில் அமர்ந்து கொண்டு கற்பிக்கிறேன் என்ற தந்தை கூறுகின்றார். ஆக இவர் தாயாக ஆகி விடுகின்றார். அதனால் தான் இவரை தாய், தந்தை என்று கூறுகிறோம். தாய், தந்தை என்று நீங்கள் பாடுகிறீர்கள், அவ்வாறு பிரம்மா, சரஸ்வதிக்கு கூற முடியாது. பிரம்மா வைகுண்டத்தை படைப்பது கிடையாது. தந்தை தந்தை தான். மேலும் இந்த பிரம்மா உங்களது மம்மா ஆவார். கல்பத்திற்கு முன்பு இவரை (பிரம்மாவை) அடைந்திருந்தார். ஆனால் சரஸ்வதியின் மகிமையை அதிகப்படுத்துவதற்காக அவரை முன்னால் வைக்கின்றார். சரஸ்வதிக்கு கல்விக் கடவுள் என்ற பெயர் பிரபலமாக இருக்கிறது. விதூத் மண்டலியைச் சார்ந்தவர்களும் சரஸ்வதி யின் பதவி வைத்துக் கொள்கின்றனர்.

எவ்வளவோ புரிய வைக்கிறேன், மன்மனாபவ என்று பாபா கூறுகின்றார். என்னை நினைவு செய்யுங்கள் மற்றும் எனது ஆஸ்தியை நினைவு செய்யுங்கள், போதும், நீங்கள் சொர்க்கத்திற்குச் சென்று விடுவீர்கள். அங்கும் வரிசைக்கிரமமாக இருப்பீர்கள் அல்லவா! சூரியவம்சத்திலும் ராயலான தாச, தாசிகள் இருப்பர். பிரஜை களுக்கும் தாச, தாசிகள் இருப்பர். சந்திரவம்சத்தின் இராஜா, ராணிக்கும் தாச, தாசிகள் இருப்பர். அவர்கள் அனைவரும் இங்கேயே உருவாகிக் கொண்டிருக்கின்றனர். இப்போது நீங்கள் சரீரத்தை விட்டு விட்டால் என்ன ஆவீர்கள்? என்ற கேட்டால் செல்லி விட முடியும். ஏதாவது ஒரு விசயம் புரியவில்லையெனில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். யோகா சரியாகயில்லையெனில் அவர்களால் சுகத்தை உணர முடியாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சோகவனத்தில் அமர்ந்திருப்பர், சொர்க்கம் என்பது அசோகவனமாகும். சீதை அசோகவனத்தில் கிடையாது, சோகவனத்தில் இருந்தார். இப்போது அனைவரும் சோகவனத்தில் அமர்ந்திருக்கின்றனர் அல்லவா! யுத்தம் நடைபெற்றால் என்ன ஆகும்? என்ற சோகம் மனிதர்களிடத்தில் இருக்கிறது. யுத்தம் நடைபெற்றால் தான் சொர்க்கத்தின் கதவு திறக்கும் என்று நாம் கூறுகிறோம்.

நல்லது, சத்தியமான உள்ளத்தில் தலைவர் இருப்பார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை உள்ளுக்குள் சைத்தான் இருந்தால் தடை உருவாக்கிக் கொண்டே இருக்கும். பிறகு கடுமையான தண்டனை அடைவர். துரோகிகளுக்கு எப்போதும் கடுமையான தண்டனை கிடைக்கும். இவர் சுப்ரீம் நீதிபதியாகவும் இருக்கின்றார். (கிருஷ்ணரின் சித்திரத்தை காண்பித்து) பாருங்கள், இவருக்கும் எவ்வளவு களங்கம் ஏற்படுத்தி விட்டனர்! இவர்

ஆடைகளை திருடவில்லை மற்றும் கம்சன், ஜராசந்தனை வதம் செய்யவில்லை. அவரது (கிருஷ்ணர்) முகத்தையும் கருப்பாக்கி விட்டனர். நல்லது.

பாப்தாதா குழந்தைகளாகிய உங்களது எதிரில் இருக்கின்றார். நமது கண் எதிரில் இருக்கின்றார் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அசுத்தமான பூட்சில் (செருப்பில்) வந்திருக்கின்றார். நான் அசுத்தமான பூட்சில் வந்தால் தூய்மை (சுத்தப்) படுத்த முடியும் என்று சுயம் பகவான் கூறுகின்றார். இப்போது பிரம்மாவின் இரவாகும், ஆக பிரம்மாவும் இரவில் தான் இருப்பார் அல்லவா! விஷ்ணு ஆகிவிடும் போது பகல் ஆகிவிடும். நல்லது.

இனிமையிலும் இனிய, செல்ல குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். தாதா என்று கூறினாலும் அல்லது குப்தமான தாய் என்று கூறினாலும் சரி தான். ஆச்சரியமான ரகசியமாகும். பாப்தாதா இனிமையிலும் இனிய குழந்தைகளுக்கு வரிசைக்கிரமமான முயற்சியின் படி என்று ஏன் கூறுகின்றார்? எப்போது பாபாவைப் போன்று சேவை செய்வோமோ அப்போது தான் பாபா அன்பு செலுத்துவார் என்பதை அறிவீர்கள். யார், எப்படி உதவி செய்வார்களோ அவர்களும் பிரஜைகளாக வருவார்கள் அல்லவா! அவர்களிலும் வரிசைக்கிரமமான செல்வந்த பிரஜைகளும் இருப்பார்கள் அல்லவா! நல்லது. காலை வணக்கம். ஆன்மீக தந்தையின் ஆன்மீக குழந்தைகளுக்கு நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) சத்தியமான தலைவனை திருப்திபடுத்துவதற்காக மிக மிக சத்தியமான உள்ளத்துடன் இருக்க வேண்டும், எந்த தடைகளையும் உருவாக்கக் கூடாது.

2) சுகத்தின் அனுபவம் செய்வதற்காக தனது யோகாவை சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். சுயதரிசன சக்கரத்தைச் சுற்றி விகர்மங்களை அழிக்க வேண்டும்.

வரதானம்: விலகிய நிலையில் நிலைத்திருந்து ஒவ்வொரு செயலையும் செய்பவராகி அனைவரது மற்றும் பரமாத்மாவின் அன்பிற்கு அதிகாரி ஆகுக

தந்தை எப்படி அனைவரிடமிருந்து விலகியும் அன்பானவராகவும் இருக்கின்றார். விலகிய தன்மையே அன்பானவராக்குகிறது. எந்தளவு தனது தேக உணர்விலிருந்து விலகி சென்று கொண்டேயிருப்பீர்களோ, அந்தளவிற்கு அன்பானவராவீர்கள். தேகத்தில் நுழைந்து கர்மம் செய்தேன் வேலை முடிந்தது விலகி விட்டேன் என்ற இந்த நிலையை இடையிடையே பயிற்சி செய்யுங்கள். அப்படி விலகிய நிலையில் நிலை பெறும் போது செய்யும் செயலும் செவ்வனே முடியும், பாபாவிற்கும் மற்றும் அனைவருக்கும் அன்பானவராவீர்கள். பரமாத்மாவின் அன்பிற்கு அதிகாரியாவது எவ்வளவு பெரிய பயனாகும்.

சுலோகன்: சுப பாவனையின் சேமிப்பு நிரம்பியிருந்தால் வீணானவைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து விடும்.

மாதேஸ்வரி ஜீ யின் விலைமதிப்பற்ற மகாவாக்கியம்: ஆத்மா ஒருபோதும் பரமாத்மாவின்

அம்சமாக ஆக முடியாது

ஆத்மாக்களாகிய நாம் பரமாத்மாவின் அம்சமாக இருக்கிறோம் என்று பல மனிதர்கள் நினைக்கின்றனர். அம்சம் என்று ஒரு சிறு துண்டாகக் கூறுகின்றனர். ஒருபுறம் பரமாத்மா அநாதி மற்றும் அழிவற்றவர் என்று கூறுகின்றனர், ஆக அப்படிப்பட்ட அழிவற்ற பரமாத்மாவை ஒரு சிறிய துண்டுக்குள் (பகுதிக்குள்) எப்படி கொண்டு வர முடியும்? பரமாத்மாவை எப்படி துண்டாக பிரிக்க முடியும்? ஆத்மாவே அழிவற்றதாக இருக்கும் போது ஆத்மாவை உருவாக்கியவரும் அழிவற்றவர் ஆகிவிடுகிறார். இவ்வாறு அழிவற்ற பரமாத்மாவை ஒரு சிறு துண்டாக ஆக்குவது என்பது பரமாத்மாவையும் அழியக் கூடியவராக ஆக்கி விடுகின்றனர். ஆனால் ஆத்மாக்களாகிய நாம் பரமாத்மாவின் குழந்தைகள் என்பதை நாம் அறிவோம். ஆக நாம் அவரது வம்சத்தினர் ஆகிவிடுகிறோம், அதாவது குழந்தைகளாக ஆகிவிடுகிறோம், பிறகு அவர் எப்படி அம்சமாக ஆக முடியும்? அதனால் தான் பரமாத்மாவின் மகாவாக்கியம் என்னவெனில் குழந்தைகளே! நான் சுயம் அழிவற்றவனாக இருக்கிறேன், சுடர்விட்டு எரியும் ஜோதியாவேன், நான் தீபமாக இருக்கிறேன், நான் ஒருபோதும் அணைவது கிடையாது. மற்ற அனைத்து மனித ஆத்மாக்களின் தீபம் எரியவும் செய்கின்றன, அணையவும் செய்கின்றன. அந்த அனைத்து தீபங்களையும் ஏற்றக் கூடியவன் நான், ஏனெனில் லைட் மற்றும் மைட் கொடுக்கக் கூடியவன் நான். ஆனால் பரமாத்மாவாகிய எனது லைட் மற்றும் ஆத்மாவின் லைட் இரண்டிற்கும் அவசியம் வித்தியாசம் இருக்கிறது. பல்ப் இருக்கிறது, சில பல்ப் அதிக பவர் உடையதாக இருக்கும், சில குறைந்த பவர் உடையதாக இருக்கும். அதே போன்று ஆத்மாவும் சில அதிக பவர் உடையதாக இருக்கிறது, சில குறைந்த பவர் உடையதாக இருக்கிறது. மற்றபடி பரமாத்மாவின் பவர் மற்றவர்களை விட குறைவாகவோ, அதிகமாகவோ ஆவது கிடையாது. அதனால் தான் பரமாத்மாவை சர்வசக்திவான் என்ற கூறுகின்றனர். அதாவது அனைத்து ஆத்மாக்களையும் விட அவரிடத்தில் அதிக சக்தி இருக்கிறது. அவரே சிருஷ்டியின் கடைசியில் வருகின்றார், ஒருவேளை பரமாத்மா சிருஷ்டியின் நடுவில் வருகின்றார் என்று யாராவது நினைத்தால் அதாவது ஒவ்வொரு யுகத்திற்கும் வருகின்றார் எனில் பிறகு பரமாத்மா அனைவரையும் விட சிரேஷ்டமானவர் என்று எப்படி ஆக முடியும்? பரமாத்மா ஒவ்வொரு யுகத்திலும் வருகின்றார் என்று யாராவது கூறினால் பரமாத்மா அடிக்கடி தனது சக்தியை காண்பிப்பார் என்று புரிந்து கொள்ளலாமா? இவ்வாறு சர்வசக்திவானின் சக்தி அப்படிப்பட்டது, அதாவது இடையிலேயே தனது சக்தியின் மூலம் அனைவருக்கும் சக்தி அதாவது சத்கதி கொடுத்து விட்டார் எனில் அவரது சக்தி நிலையாக இருக்க வேண்டும், பிறகு துர்கதி ஏன் ஏற்பட்டது? ஆக இதன் மூலம் பரமாத்மா ஒவ்வொரு யுகத்திற்கும் வருவது கிடையாது, அதாவது இடையிடையில் வருவது கிடையாது என்பது நிரூபணம் ஆகிறது. அவர் வருவது கல்பத்தின் கடைசியில், மேலும் ஒரே ஒரு முறை தனது சக்தியின் மூலம் அனைவருக்கும் சத்கதி செய்கின்றார். பரமாத்மா இவ்வளவு உயர்ந்த சேவை செய்திருப்பதால் தான் அவருக்கு நினைவுச் சின்னமாக பெரிய சிவலிங்கத்தை உருவாக்கியிருக்கின்றனர், இவ்வளவு பூஜை செய்கின்றனர், ஆக பரமாத்மா சத்தியமாக இருக்கின்றார், சைத்தன்யமாகவும் இருக்கின்றார் மற்றும் ஆனந்த சொரூபமாகவும் இருக்கின்றார். நல்லது. ஓம்சாந்தி.